பொது சன நூலகம்
Sept
02 AUG 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

பக்கங்கள் 4

# உதயதாரகை

கிறிஸ்தவ வாரப் பத்திரிகை

மலர்: 158 ஆரம்பம்: 1841 வெள்ளிக்கிழமை 22 - 8 - 1997 இதழ்: 19

'கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவ ஊற்று; அதினால் மரணக் கண்ணிகளுக்குத் தப்பலாம்'

நீதிமொழிகள் 14. 27

# கிறிஸ்துவின் அன்பை விட்டு எதுவும் எம்மைப் பிரிக்க முடியாது!

**"சாவோ, வாழ்வோ, எதுவெனினும் கிறிஸ்துவின் அன்பை விட்டுத் தன்னைப் பிரிக்க முடியாது எனப் பவுல் அடிகளார் அறிந்திருந்த படியாற்றான் அவரால் தனது பணியில் மேலோங்க முடிந்தது" என்றார் அருட்திரு எஸ். பி. ஜெயசிங்கம் அடிகளார்.**

திருமதி. அன்னா அன்னம்மா அம்பலவாணர் அவர்களது 25வது ஆண்டு நினைவுச் சிறப்பு ஆராதனையில் அருளுரை ஆற்றியபோதே அடிகளார் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேற்படி ஆராதனை சென்ற 13- 08- 97 அன்று ப.ப 3 00 மணிக்கு கிறிஸ்தவ இறையியற் கல்லூரியில் நடாத்தப் பட்டது. வணக்க அழைப்பினை வண. எஸ். பி ஜெயசிங்கம் ஏற்றெடுத்த பின்பு திருமதி. ஜீவா இரத்தின சபாபதி அவர்களால் ஒரு தேவாரம் இயற்றிப் பாடப் பட்டது. வண. டி. ஆர் அம்பலவாணர் இறைவேண்டல் செய்தார். சகோ. பி தேவதாஸ் "மூதாதையர்க்குப் புகழ்ச்சி' எனும் பகுதியை ஏற்றெடுத்த பின்பு வைத்தியக் கலாநிதி திருமதி, சி. அம்பலவாணர் திருமறைப் பாடம் வாசித்தார் கிறிஸ்தவ இறையியற் கல்லூரி பாடகர் குழுவினர் சிறப்புப்பாடல் பாடிய பின்பு அடிகளார் அருளுரை ஆற்றினார். நன்றி செலுத்துதல் செபத்தினை செல்வி. எம். எஸ். செல்வதுரை ஏற்றெடுத்த பின்பு முன்னாள் பேராயர் கலாநிதி டி. ஜே. அம்பலவாணர் இறை ஆசி வழங்கினார்.

அடிகளார் மேலும் "சைவ வைதீக குடும்பத்தில் பிறந்த அம்மையார் உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி பயின்றார். அப்போது கிறிஸ்துவை அறிந்து கொண்டார் இதன் பின்பு அவரது பெற்றாரின் ஜீவியத்திலிருந்து அவரது ஜீவியம் வேறுபடத் தொடங்கிற்று. கஷ்டங்கள் வாழ்வில் வந்தன. எனினும் கிறிஸ்துவின் அன்பில் தளைத்து ஓங்கி விசுவாசத்தில் வாழ்ந்து, உறுதியில் நிலைத்திருந்தார்.

அவர் வளர்ந்த பின்பு பணக்காரர்களான சைவக் குடும்பங்களில்இருந்துநிச்சயதார்த்தம் வந்த போது, அவற்றைத் தட்டிக் கழித்தார் என அத்தியட்சர். குலேந்திரன் ஒரு முறை கூறியுள்ளார்.

ஒரு முறை போல் அடிகளார் அம்மையாரைப் பற்றி 'உதயதாரகை' யில் எழுதினார். இந்தியாவின் எல்லூர் எனும் இடத்தில் பணியாற்றிய அமரர் வண. ஜே. பி. அம்பலவாணர் இந்தப் பத்திரிகையை வாசித்தார். 'இந்தப் பெண்ணே தன் வாழ்க்கைத் துணை' என திடசங்கற்பம் பூண்டார். அவரைச் சந்தித்து மணமுடித்து குடும்ப வாழ்வைச் சிறப்பாக நடத்தினார். பின்னர் போதகர் இறந்த பின்பு அம்மையாரே பிள்ளைகளைப் பராமரித்தார். பிள்ளைகளில் இருவரே எமக்குள் இல் உள்ளனர். (முன்னாள் பேராயர் கலாநிதி டி. ஜே. அம்பலவாணர்; CTS காப்பாளர் வண. டி. ஆர். அம்பலவாணர்) மூவர் வேறு வேறு இடங்களில் உள்ளனர் எனினும் அவர்கள் இன்று தமது தாயாரை நினைவு கூருகின்றனர். "நானல்ல கிறிஸ்துவே" என்று செயற்பட்ட சிறந்த நங்கையாக திரு. கி அன்னா அன்னம்மா அம்பலவாணரை நாம் காண்கிறோம்" என்றார்.

## வன்னியில் பொன்விழா

மேற்படி வன்னிப் பிராந்தியப் பொன் விழாக் கொண்டாட்டங்கள் 12 -8- 97 இல் நடைபெற்றது. காலை 9. 30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் அதன் பின்பு 11. 00 மணிக்கு பகிரங்கக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது 12. 00 க்கு நடந்த ஐக்கிய விருந்தின் பின்னர் 2 00 மணியளவில் கலை நிகழ்வுகள் நடாத்தப்பட்டன இதை ஒட்டி யாழ் ஆதீனப் பணிகளைக் குறித்தும், வன்னிப்பிராந்தியப் பணிகளைக் குறித்தும் துண்டுப் பிரதிகள் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டன- இக் கொண்டாட்டங்கள் தென்னிந்தியத் திருச்சபை புனித யாக்கோபு ஆலயத்தில் (சமாதானபுரம் - அக்கராயன் குளம்) நடைபெற்றன.

## வெளிவாரி B.A பதிவுகள்

B. A. பட்டப் படிப்புக்கான புதிய (வெளிவாரி) பதிவுகளை எதிர்வரும் 30. 8. 97 க்கு முன்னர் மேற் கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளது.

## திருவும் அருள்திருவும்



திரு:- "போதகர் ஐயா ... ஏன் நீங்கள் பிரசங்கம் செய்வதற்கு முன் ஜெபம் செய்கிறீர்கள்?"

அருள்திரு:- "நான் நல்ல முறையில் பிரசங்கம் செய்ய இறைவன் அருள் தர வேண்டும் என்பதற்காக"

திரு:- (சற்று நேரம் யோசித்து விட்டு) 'அப்போ ஏன் உங்கள் ஜெபத்தை இறைவன் செவி மடுப்பதில்லை'

## உறுதியாகத் தெரியாதாம்

"இந்திய மீனவர்களை இலங்கைப் படையினரா தாக்கினார்கள் என உறுதியாகக்கூறமுடியவில்லை" என்றார் 'இந்தியப் பிரதமர் குஜ்ரால். மேலும் இலங்கை இனப் பிரச்சனையில் இந்தியா தலையிடாது. ஒரு முறை தலையிட்டுப் பட்டது போதும்' என்றும் கூறினார். இத் தகவல்களை வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று வெளியிட்டது.

## வரலாற்றில் இரண்டு பொன் விழாக்கள்

இவ்வாண்டு இரண்டு முக்கியமான பொன் விழாக்கள் கொண்டாடப் படுகின்றன. ஒன்று எமது தென்னிந்தியத் திருச் சபையின் பொன் விழா. இரண்டாவது இந்திய நாட்டின் சுதந்திரப் பொன் விழா. இது இந்தியாவில் விமரிசையாகக் கொண்டாடப் பட்டது. தென்னிந்தியத் திருச் சபையின் பொன் விழாவினையும் விமரிசையாகக் கொண்டாட இந்தியாவிலும் இலங்கையிலும் ஏற்பாடுகள் மும்மரமாகக் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

## வரைதற் போட்டிகள்

தென்னிந்தியத் திருச்சபையின் பொன் விழாவினை ஒட்டி வரைதற் போட்டிகள் கடந்த 15-8-97 இல் நடாத்தப்பட்டது. இதில் அனேக பிள்ளைகள் பங்குபற்றினர்.

## சமாதானபுரத்தின் 13வது ஆண்டு விழா

வன்னி மாவட்டத்தில் கடந்த 25- 07- 97 அன்று சமாதானபுரம் சபையின் 13 ஆவது ஆண்டு விழா மாலை 3: 30 மணிக்கு அருட்திரு ஈ என். லோறன்ஸ் அடிகளார் நடாத்திய திருவிருந்து ஆராதனையுடன் ஆரம்பமாகியது. அருட்திரு ஐ. என். அருள்பாலன் அடிகளார் அருளுரையாற்றினார்.

ஆராதனையைத் தொடர்ந்து அருட்திரு. மைனசீலன் அடிகளார் சபையின வாலிபர்களுக்கிடையே வேத வினாவிடைப் போட்டியினை நடாத்தினார்கள் பரிசுகளும் வழங்கப்பட்டன. தொடர்ந்து நடாத்தப்பட்ட கலைநிகழ்ச்சிகள் பார்த்தோர் மனதைக் கவர்ந்து கொண்டன.

## ஆங்கில வகுப்புகள்

யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆங்கில வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புகள் கலாநிதி போட்டர் அவர்களின் நெறிப் படுத்தலின் கீழ் அவருடன் இணைந்து செல்வி. செல்வதுரை, திரு. தெய்வபாலன் என்போரினால் கற்பிக்கப்பட்டு வருகின்றன இவ்வகுப்புகள் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9. 00மணி முதல் மாலை 3. 00 மணி வரை நடைபெருகின்றன. டிசம்பர் நடுப் பகுதி வரை இது தொடரும்.

யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்கள் சிலரும், உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் சிலரும், இறையியற் கல்லூரி முதலாமண்டு மாணவர்களும், இவ்வருடம் புதிதாக ஊழியர்களாகப் புறப்பட்டவர்களும் இவ் வகுப்பால் பயனடைந்து வருகின்றனர்.

## புகைத்தல போட்டியில மரணம்

மத்திய சீனாவில் நடந்த புகைத்தல் போட்டி பற்றி கடந்த 10- 8- 97ல் வெரித்தாஸ் வானொலி தனது செய்தி அறிக்கையில் குறிப்பிட்டது. இப் போட்டியில் 100 சிகரட்டுகளை ஊதித்தள்ளிய ஒருவர் வயது 19 இடத்தில் சுருண்டு விழுந்ததாகவும் 84 சிகரட்டுகளை ஊதித்தள்ளிய ஒருவர் வயது 21 ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதாகவும் இச் செய்தி குறிப்பிட்டது

# திருச்சபை ஐக்கியத்தின் பொன்விழா ஆண்டு 1947 - 1997

சென்ற இதழ் தொடர்ச்சி

பேராயர் S.J எழுதும்

# ஒப்புரவாகுதல்

ஒரு நாள் கிருஸ்ணபிள்ளை அவரிடம் வந்து ஐயா ஒருவர் என்னிடம் கிறிஸ்துவை பற்றிக் பேசிவிட்டார் யார் என்று கேட்டார். வணக்கத்துக்குரிய ஹஸ்டபின் பவுலடியார்தான் என்னுடன் பேசிவிட்டார் என்றார். கிருஷ்ணபிள்ளை அதோ பாருங்கள் அந்த வசனத்தை என்று அங்கே பெரிதாக எழுதப்பட்டுள்ள 2 கொரிந்தியர் 5: 17 வசனத்தை காட்டினார்கள்: 'ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின''

என்று எழுதப்பட்டிருந்த வசனத்தைக் காட்டினார். சங்கர நாராயண கிருஷ்ணபிள்ளையாகி, H.A. கிருஷ்ணபிள்ளையாகி மாறினார் அதன் பின் அவர் முற்றிலும் புது சிருஷ்டியாக உருவெடுத்தார். முன்பு கல்லூரியில் தமக்சென ஒரு கிணற்றை எடுத்துக் கொண்டு வேறொருவருக்கும் அதிலே பங்கு கொள்ளாதபடி ஆசாரமாக வாழ்ந்த கிருஷ்ணபிள்ளை பிறவி ஜனங்களையும் ஏனைய தாழ்த்தப்பட்டவர்களையும் அன்பாகத் தழுவினார். ''வாங்கடா நீங்கள் எல்லாரும் கடவுளுடைய பிள்ளைகள்'' என்று சொல்லி சீராட்டினார்.

ஒருவன் புது சிருஷ்டியாகி விட்டால் அவனுடைய பணி எல்லாரையும் ஒப்புரவாக்குதலாகும். மக்களை ஒருவரோடொருவர் ஒப்புரவாக்குதல் மனுக்குலத்தை இறைவனோடு ஒப்புரவாகுதல். இலங்கையிலே போர் இப்போது உக்கிரகம் அடைந்து வருகின்றதென்பதை நீங்கள் அறிவீர்கள். சமாதான முயற்சியில் ஈடுபட்டியிக்கும் பலர் எம்மைச் சந்திக்க வருவார்கள். குவேக்கர் இனத்தைச் சேர்ந்த அன்பர் ஒருவர் எனக்குக் கூறிய பதில் ஒன்று என் நெஞ்சைத் தொட்டது. நீண்டு பேசிக் கொண்டிருந்த அவருடன் நான் ஒரு தனிப்பட்ட கேள்வி கேட்கலாமா? என்று சொன்னேன் அவர் ''தாராளமாக என்றார். அப்பொழுது நான் நீங்கள் சமாதானத்திற்கான நோபல் பரிசில் ஆர்வமுடையவராக இருக்கிறீர்களா? என்று கேட்டேன் அதற்கு அவர் சமாதானத்திற்கான நோபல் பரிசினை எனக்குத் தந்தால் நான் மறுக்கப் போவதில்லை. ஆனால் நான் இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பதற்கு காரணம் இது சாத்தியப்படும் என்பதனாலேயே. ஏனெனில் போரில் ஈடுப்படிருக்கிறேன் இருபகுதியாரும் மானிட இனத்தைச் சேர்ந்தவர்கள். மானிட இனத்தில் ஒப்புரவாகும் எண்ணத்தை கடவுள் வைத்துள்ளார். ஆகையினால் என்றைக்கோ ஒருநாள் ஒப்புரவாகுதல் நடைபெறத்தான் போகிறது. இதனைத் துரிதப்படுத்துவது தான் எமது வேலை என்று குறிப்பிட்டார். 'லியோ ரோல்ஸ்ராய்' எனும் எழுத்தாளர் தாம் எழுதிய ''மனிதன் எதைக் கொண்டு வாழ்கிறான்'' என்ற அருமையான சிறு கதையில் மனித உள்ளத்திலே என்ன இருக்கின்றது என்று விளக்குகின்றார். மைக்கல் எனும் தேவதூதன் கடவுளுடைய சமூகத்தைப் பெற்று பூலோகத்திற்கு வருகின்றான். அவன் கற்றுக் கொள்ள வேண்டிய மூன்று பாடங்கள் கூறப்படுகின்றன.

மனிதன் எதனைக் கொண்டு வாழ்கிறான் மனித உள்ளத்திலே என்ன இருக்கிறது. மனிதனுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது என்பதே அந்த மூன்று பாடங்கள். அவன் முதலாவதாக மனிதனுடைய உள்ளத்திலே அன்பு இருக்கின்றது என்பதைக் கற்றுக்கொளகிறான். வறுமையில் மூழ்கிக் கிடந்த சீமோன் எனும் செருப்புத் தொழிலாளியின் மனைவி அவனுக்கு உணவு பரிமாறுகையில் காட்டிய அன்பும் பரிவும் அவன் உள்ளத்தை உலுக்கி விடுகின்றது. மனிதனுடைய உள்ளத்திலே அன்பிருக்கின்றது என்பதனை அவன் கண்டு கொள்கிறான்.

கிறிஸ்துவின் அடியவர்கள் ஒப்புரவுப் பணியில் ஈடுபடவேண்டும் என்பது ஆண்டவனின் சித்தம். 1947 இல் இந்து முஸ்லீம் கலவரம் இந்தியாவை கலக்கிய பொழுது அண்ணல் காந்தி அவர்கள் YMCAயிடமே உதவி கோரினார். நீங்கள் கிறிஸ்துவின் அடியவர்கள் ஒப்புரவுப் பணியில் இறங்குங்கள் என்று அறைகூவலை விடுத்தார். இந்த அன்புப் பணியில் ஈடுபடுவது நம் ஒவவொருவருடைய கடமையாகும்.

(முற்றும்)

# ஆதியாகமம் பேசுகிறது

பாகம் நான்கு

படைப்பின் ஒழுங்கு முறையில் வாரத்தின் 6 நாட்களும் கர்த்தர் சகல படைப்புகளையும் திட்டமாக நிறைவாக்கி விட்டார். 7ம் நாளில் அவர் ஓய்ந்திருந்தார். (ஆதி 2: 2 — 3) ஓய்வு நாளை அவர் எவ்வாறு மகிமையின் நாள் ஆக்கினாரெனின் அதில் 3 உண்மைகள் பொதிந்துள்ளன.

அவையாவன,

1) ஓய்வு நாளை கர்த்தரே உண்டு பண்ணினார்.

2) அந்நாளை ஆசீர்வதித்து, பரிசுத்தமாக்கினார்.

3) அதே நாளில் தன் கிரியைகளை விட்டு ஓய்ந்திருந்தார்.

திருமறை முழுவதிலும் இவ்வண்ணம ஓய்வுநாள் பரிசுத்தமாக யூத மக்களால் ஆசாரிக்கப் பட்டு வந்ததை எவரும் மறக்கமுடியாது. ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விஷேசம் வரை அதற்கான ஆதாரங்கள் உண்டு.

ஆதியிலிருந்து யூதர்களின் வாழ்க்கை முறை ''6 நாட்களும் வேலை; 7ம் நாளில் ஓய்வு'' என்பதாக கைக் கொள்ளப்பட்டு வந்தது. இந்த யூத இலககிய சாயலே வேதாகமத்தில் வைக்கப் பட்டுள்ளதா? அல்லது வேதாகம ஒழுங்கு முறையைத்தான் யூதர்கள் பின்பற்றி வருகின்றார்களா? என்பது ஆராயப்பட வேண்டும். இதனை விட முக்கியமானது 7ம் நாளில் ஓய்வு நாள ஆசாரிப்புதான் ஆம். இங்கே ஓய்வு நாள் ஆசாரிப்பு இறை சட்டமாக? மனித சட்டமா? என்ற ஐயப்பாட்டிற்கே முதலில் விடைகாணவேண்டும்'

ஒரு உண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ''கர்த்தரின் விருப்பத்தின் படியே சகலமும் உண்டாக்கப்பட்டன; உண்டாக்கப்பட்டதொன்றும் மனிதனுக்கு தீமையை விளைவிப்பனவல்ல. இறைவனின் படைப்புக்கள் நன்மையையே தருவன; தீமையை தருவது மனித படைப்புகளே'' என்பதுதான். மேலும் படைப்புகளை நிகழ்த்திய இறைவனே ஓய்வு நாளையும் சிருஷ்டித்தார் பரிசுத்தமாக்கிய அந்நாளில் அவரே ஓய்ந்திருந்தார். அப்படியானால் மனிதன் ஓய்ந்திருக்க அவசியமில்லையா? சர்வ வல்லமையுள்ள தேவனே ஒரு காலத்தில் ஓய்ந்திருந்தால் பலவீன மனிதன் அனுதினமும் பாடுகளைப்பட்டு உழைப்பதா? மனிதனுக்கே ஓய்வு மிக மிக அவசியம். மனிதன் சிந்திக்க வேண்டும். எது அவசியம் பரிசுத்தமா? பாவமா? பரிசுத்தமுள்ள தேவன் பாவ மனிதனுக்கு வழி காட்டவே அந்நாளை பரிசுத்தப் படுத்தி ஓய்ந்திருந்தார். அப்படியானால் பாவமனிதன் அந்நாளில் ஓய்ந்திருந்து தன்னைப் பரிசுத்தப் படுத்திக்கொள்வது எவ்வளவு அவசியமானது.

(தொடரும்)

'உங்களவன்' எழுதும் தொடர் கதை

# நிம்மதி எங்கே?

தனது தங்கைக்கு சீதனம் தேடுவதற்காக ''காசு... காசு'' என இப்படி அலைந்து கொண்டிருந்தான்.

அவன் ஒரு நாளும் என்ன விஷயத்திலும் தன் தங்கையைக் கண்டிப்பதுமில்லை, தன் தங்கைக்கு குற்றம் செலுத்துவதுமில்லை,

சீதனக் கொடுமை எத்தனை பேரை ஆட்டிம்படைக்கிறது. காசு என்னும் பிசாசு எத்தனை நல்லவர்களை கெட்டவர்களாக்கி விட்டது. அதை அவன் அப்போது தான் நன்றாகப் புரிந்து கொண்டான்,

ஒரு நாள் வைகறைப் பொழுதினிலே காலைக் கதிரவன் தனது கடமையினைச் செம்மையாகச் செய்து கொண்டிருக்கையில் விவசாயிகள், தொழிலாளிகள் யாவரும் தமது தொழில்களை மேற்கொள்வதற்காக தங்கள் தங்கள் ஸ்தலத்திற்கு விரைந்து கொண்டிருக்குறார்கள், ராஜாவும் தனது கூலிவேலையைச் செய்வதற்கு விரைந்து கொண்டிருந்தான்.

இந்த மனித இனத்தில் எவ்வளவு வேறுபாடுகள்? பணம் மிஞ்சிக் கிடப்பதால் பணத்தைத் தண்ணீராக செலவழிப்பவர்கள் எத்தனை பேர்? ஒரு சதசத்திற்காக அலையும் ஏழைத் தொழிலாளிகள் எத்தனை பேர்?

''திருவள்ளுவர் ஸ்ரோர்ஸ்'' வழமைப்போல் தனது வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த செட்டிநாத முதலியார் கணக்கு வழக்குகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அப்போது மூன்று முகமூடி அணிந்த மனித இனம் கடைக்குள் புகுந்து கொள்கிறது. ''டேய் செட்டிநாதா! இப்ப நீ என்ன பண்ணுற ... அவ்வளவு பணக்கட்டுகளையும் என்கிட்ட ஒப்படைச்சுடறே'' அந்தக் கூட்டத்தில் ஒரு மனித இனம் முன்வருமாறு எச்சரிக்கை ராகம் படிக்கிறது. செட்டிநாத முதலாளியார் அம் மூன்று பேரினதும் துப்பாக்கி முற்றுகைசகு உள்ளாக்கப் படுகிறார்.

''ஐயோ என் பணம் ... என் பணம் ... என்னைக் காப்பாத்றுங்க'' அவரின் கூக்குரல் அந்த கிராமம் முழுவதும் கேட்டது. ஆனால் அவருக்கு உதவி செய்வதற்கு ஒருவருமே முன்வரவில்லை இரண்டாவதாக நின்ற முகமூடி அணிந்த பயங்கர கோர முகத்துடன் காட்சியளித்த மனித இனம் போட்ட ''ஏய்! இங்கை யாரும் வந்தீங்க எவருன்னும் பாக்க மாட்டேன். சுட்டுப் பொசுக்கிடுவேன்'' என்ற பயங்கர சத்தம் கேட்டு ஒருவரும் அங்கு வரவில்லை.

முதலாளி போட்ட சத்தம் அவனுக்கு என்ன மாதிரி இருந்ததோ என்னவோ, ஏய் சத்தம் போடாதை ... போட்ட என்னடா செய்வீங்க? என்ன செய்வீங்கன்னு கேக்கிறேன் ... ம் '' கொள்ளையர் தலைவன் தனது துப்பாக்கியை எடுத்து அவரைச் சுடுவதற்குத் தயாராகிறான்

(தொடரும்)

# புலம்பல்

மனித வரலாற்றில் துன்பங்களையெல்லாம் இறைவன் வெற்றி மகுடமாக மாற்றி விடுகிறார். இது தான் திருமறை தரும் அடிப்படை தத்துவமாகும்.

அந்த சமூகத்தின் சுதந்திரம் அதன் செயற் பாடுகளில் தெரிந்தது. அந்தச் சமுகம எவ்வளவு மகிழ்ச்சியாய் இருந்தது. அவர்கள் ஆலயத்துக்குள் போகும் போது எப்படி ஆடிப்பாடி போவார்கள். அந்த சமூகத்தின் வாலிபர்கள் துளிர்த்து நிற்கும் வாழை குருத்துக்கள் போல இருந்தார்கள். அந்த சமூகத்தின கன்னியர்கள் கும்மியடித்து பாடுவது எவ்வளவு அழகாக இருந்தது எங்கும் மகிழ்ச்சியின் வெள்ளம்.

இப்போது அந்தச் சமூகம் அடிமைகள். ஆம் அன்னியநாட்டின் அடிமைகள். அவர்களின் அடிமை வாழ்வு அவர்களின் குமுறுதலில் கேட்டது. அவர்கள் இப்போது ஆலயத்திற்கு செல்ல முடியாது. ஆலயத்தை நினைக்கத்தான் முடியும். அந்த சமுகத்தின் வாலிபர்கள் தண்ணீர் பாய்ச்சப் படாத வாழைமரங்களை போல வாடி நிற்கின்றார்கள். அந்த சமுகத்தின் மங்கையர்கள் இப்போது அமைதியில் நிலைத்திருக்கிறார்கள். அவர்களின் எதிர்காலம் இருளாய் தோன்றி விட்டதே என அவர்களின் உள்ளம் வேதனை பட்டுக் கொண்டிருக்கிறது.

இது தான் இன்று நமது சமுகத்தின் நிலை. ஆனால் அவர்கள் அந்நிய நாட்டின் அடிமைகள். இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு புலம்பிய புலப்பல் இன்று நமது சமுகத்தின் புலம்பலுக்கு ஒத்திருக்கிறது. ஆனால்

(4ம் பக்கம் பார்க்க)

உதயதாரகை
வட்டுக்கோட்டை

## லீவைஸ் நினைவு

இன்று லீவைஸ் போல்டிங் அவர்களின் பிறந்த நாள் நினைவு கூரப்படுகிறது. இது அவரது 206வது பிறந்த நாள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேவையாற்றியவர்களுள் தமது 50 வருடக் கொண்டாட்டத்தை முடித்த ஒரு மிஷனரி இவரேயாகும். 1820 ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்த லீவைஸ் அடிகள் 1823 ம் ஆண்டு தாம் மரிக்கும் வரை நற்சேவை புரிந்தவர். அனேக தமிழ்க் கீதங்கள், மோட்ச பிரயாணம் தமிழ்ப்பதிப்பு, வேதச்சரித்திரப் பொழிப்பு, தமிழ் அகராதி, ஆங்கில அகராதி உட்பட இருபதுக்கு மேற்பட்ட நூல்களை ஆக்கியவர் இவர். இவருடன் இவரது உடன் பங்காளியாக லீவைஸ் அம்மாவும் முன் நின்று உழைத்தார். லீவைஸ் அவர்கள் உடுவிற் பெண் பாடசாலைத் தலைவராகவும் சேவையாற்றியவர்.

இன்றைய தினத்தில் நமது ஆதீன இல்லப் பிள்ளைகள் தமது இல்ல விழாவினைக் கொண்டாடி மகிழ்கின்றனர். இல்லப்பிள்ளைகளை நோக்குகிற நாம் அவர்களைப் பாராட்டாது இருக்க முடியாது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் முன்னேறி வருகின்றனர்.

நமது இல்லப் பிள்ளைகளிடையே சிறந்த பாடக, பாடகிகளைக் கண்டு கொள்ளலாம்; சிறந்த விளையாட்டு வீர, வீராங்கனைகளைக் கண்டு கொள்ளலாம்; வேத அறிவு பெற்றவர்களையும், சிறந்த நடிபுத்திறன், நடனத்திறன், பேச்சுத்திறன் கொண்டவர்களையும் இசைக் கருவிகளை செவ்வனே மீட்டுபவர்களையும் நாம் இல்லப் பிள்ளைகளில் காணலாம்.

இவற்றை நாம் நோக்கும் போது எம் உள்ளம் குளிர்கிறது அன்று மிஷனரிமார் ஏற்றிய தீபம் சுடர் விடுவதைப் பார்க்கையில் மகிழ்வாக இருக்கிறது. இல்லப் பிள்ளைகள் தொடர்ந்தும் வளர இறைவன் அருள்தருவாராக!

# நம்பிக்கையிற் களிகூருங்கள்!

"நம்பிக்கையிற் களி கூருங்கள்" என்பதை ஆராயத் தலைப்படும் முன்னதாக — நாம் நம்பிக்கை என்பதை அறிதல் வேண்டும். எபிரேயர் நிருபத்திலே நம்பிக்கை என்றால் "நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" என்று கூறப்பட்டுள்ளது. எதிர் காலத்தைப் பற்றிய நம்பிக்கை எம்மிடத்தில் இருக்கும் போது தான் நாம் அதனூடாக சந்தோஷமடைய முடியும். ஆவியின் கனிகளில் ஒன்றாக இவ்விசுவாசமானது கருதப்படுகிறது.

"அற்ற குளத்தில் அறநீர்ப் பறவை போல் உற்றுளிதீர்வார் உறவல்லர் அக்குளத்தில் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போல ஒட்டி உழல்வாரே உறவுடையவர்கள்" என்ற பழமொழியை யாவரும் அறிந்திருப்பீர்கள். அப்பழமொழியின் கருத்தை நாம் ஆராயும் போது தண்ணீரில்லாத வறண்ட குளத்தில் ஓர் பறவையும் தங்கமாட்டாது. அப்பறவை எங்கு நீர் நிறைந்துள்ளதோ, அங்கேயே நாடிப்போகும். அவ்வாறான பறவை அக்குளத்திற்கு உறவுஉடையதல்ல. ஆனால் அக்குளத்திலே இருக்கும் சொட்டி, ஆம்பல், நெய்தல் போன்ற தாவர வகைகள் அக் குளத்தில் தண்ணீர் இருந்தாலென்ன – இல்லாவிட்டால் என்ன – வேறு ஓர் இடம் நாடிப்போகாது அங்கேயே வாழும். அத்தாவரமானது தண்ணீர் வற்றிய போது சாய்ந்திருந்து மீண்டும் தண்ணீர் வரும்போது மீண்டும் எழுந்து நிமிர்ந்து நிற்கும். அப்புல்லிற்கு ஒரு நம்பிக்கை இருந்தபடியால் தான் அக் குளத்திலே வாழ்கிறது. நம்பிக்கை அவர்களிடத்தில் நிலைத்திருப்பதால் அப்புற்கள் சந்தோஷமாக இருக்கின்றன.

பிள்ளைகள் விழா கட்டுரைப் போட்டியில் 16வயதுப் பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

பவுலையும் சீலாவையும் நாம் நோக்கும் போது, அவர்கள் எஜமானுடைய குறிசொல்லும் பெண்ணிலிருந்த ஆவியைத் துரத்திய படியால் சிறையில் அடைக்கப்படுகிறார்கள், அவர்கள் அச்சிறையிலே இருந்த போதும் ஒரு துன்பமும் அடையாமல், எந்தவேளையும் இறைவனைப் புகழ்ந்து பாடிக்கொண்டேயிருந்தார்கள் என்றும், அவர்கள் கடவுள் மேல் வைத்த நம்பிக்கை காரணமாக சிறைச்சாலைக் கதவுகள் உடைக்கப்பட்டு, அதன் மூலம் அங்கு காவல் காத்திருந்த காவற்காரன் இரட்சிக்கப்பட்டான் என்றும் வேதாகமத்தினூடாக அறிகிறோம். அவர்களிடத்தில் நம்பிக்கை காணப்பட்ட படியாற்றான் அவர்கள் சந்தோஷமாயிருந்தார்கள். இயேசு கூறுகிறார் - "என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான், உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் எவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்". அவ்விதமாக நாம் அவரில் நம்பிக்கை கொள்வோமானால், அந்த நம்பிக்கையின் மூலமாக நாம் களிகூரமுடியும்.

பன்னிரண்டு வருடம் பெரும்பாடுள்ள ஸ்திரி எவ்வளவு பணத்தைத் தான் வைத்தியருக்குச் செலவழித்தும் குணமாக்கப்படாத போது, அவள் இயேசுவின் வஸ்திரத்தைத் தொடுகிறாள். தொட்டவுடன் குணமாகிறாள். என்று வேதாகமத்திற் கூடாக அறிகின்றோம். அவளிற்கு அவர் மேல் நம்பிக்கையிருந்த படியினாலே இயேசுவினுடைய வஸ்திரத்தைத் தொட்டுக் குணமடைகிறாள். இயேசு அவளைப் பார்த்து "திடன் கொள் உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று கூறுகின்றார். அவளுடைய விசுவாசம் அன்று அவளை இரட்சிக்கிறது. தோமா இயேசு உயிர்த்தெழுந்ததை நம்பாதபோது இயேசு அவனிற்குத் தரிசனமாகி, தன்னுடைய கைகளையும் கால்களையும் காட்டுகின்றார். இயேசு அவனைப் பார்த்து "என்னைக் கண்டு விசுவாசிக்கிறாய். என்னைக் காணாமல் விசுவாசிக்கிறவன் பாக்கியவான்" என்று கூறுகின்றார். நாம் அவரைக் காணாமல் விசுவாசிக்கும் போது அதனூடாக நாம் களிகூரக்கூடியதாயிருக்கும்.

உரோம அரசன் தன் சிலையைச் செய்து எல்லா ஜனங்களையும் தன் சிலையை வணங்கச் செய்யும்படி தன் ஆட்களுக்குக் கட்டளையிடுகிறான். ஆனால் சாத்திராக், மேசாக், ஆபேத்நேகோ என்ற மூன்றுபேரும் அவனுடைய சிலையை வணங்கவில்லை. அவர்களைப் பலவந்தப்படுத்திய போதும் அவர்கள் அச்சிலையைத் தாங்கள் வணங்க மாட்டோம் என்று கூறினார்கள். அதன் மூலமாக அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். ஆனாலும் அவர்கள் கடவுள்மேல் வைத்திருந்த நம்பிக்கையினால் விடுவிக்கப் பட்டார்களென்றும், தன்னை வணங்கும் படி கூறிய அரசனே எல்லா மக்களையும் தேவனை வணங்கும்படி கூறினான் என்றும் வேதாகமத்திற் கூடாக அறிகிறோம் அவர்களின் விசுவாசம் அரசனின் மனதை எவ்வாறு மாற்றியது என்பது இதனூடாகப் புலப்படுகிறது.

மூந்நூறு ஆண்டுகளிற்கு முன் மக்கள் தேவனை வழிபட்ட போது அதற்கும் மாறாகப் பிரசாரம் பலர் செய்த போதும், வேதாகமத்தைத் தீயிலிட்டு எரித்த போதும், மக்களைக் கொடூரமாய்த் துன்பப்படுத்திய போதும் அம் மக்கள் மனஞ்சோரவில்லை. தாங்கள் தேவனை வணங்குவதையும் நிறுத்தவில்லை. அவர்களுடைய விசுவாசத்தினால் அவர்கள் தேவனுடைய இரத்தச் சாட்சிகளாக மரித்தார்கள். ஸ்தேவானைக் கல்லெறிந்து கொல்கின்ற வேளையிலும் அவர் தேவனைப் புகழ்ந்து கொண்டேயிருந்தார். அவர் இறக்கும் போதும் புன் முகச் சிரிப்புடனேயே மரித்தார். அவர் கடவுளின் மேல் வைத்த விசுவாசத்தின் காரணமாக அவர் எந்த வேளையிலும் சந்தோஷமாயிருந்தார்.

பழைய ஏற்பாட்டிலே நாம் பார்க்கும் போது, ஆபிரகாம் தனக்குக் கடவுள் கட்டளையிட்டதின் படியே வேறு ஓர் இடத்திற்குப் போகிறான். கடவுள் கூறிய படியே அவனுடைய ஜாதியானது பல்கிப் பெருகுகிறது. அந்தச் சந்ததியிலே இயேசுவானவர் பிறக்கிறார். அவனுடைய விசுவாசம் அவனைக் கைவிடவில்லை. அவனுடைய விசுவாசத்தினால் விசுவாசத்தின் தந்தை என அழைக்கப்படுகிறான்.

யவீருவின் மகள் அவள் தகப்பனுடைய விசுவாசத்தினாலே உயிரோடெழுப்பப் பட்டாள். அதுபோல் நூற்றுக்கதிபதியின் வேலைக்கரான் நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தால் குணமடைந்தான். நூற்றுக்கதிபதி இயேசு தன் வீட்டைச் சமீபித்ததைக் கண்டு, தன் சிநேகிதனை அழைத்து, "நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரனல்ல. நான் என்னை உம்மிடத்தில் வரவும் பாத்திரனாக எண்ணவில்லை. நீர் ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும். அப்பொழுது என் வேலைக்காரன் குணமடைவான்" என்று கூறி அனுப்பியபோது, இயேசு இவைகளைக் கேட்டு, தனக்குப் பின் செல்கின்ற ஜனத்தைப் பார்த்து "இஸ்ரவேலுக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை" என்று கூறுகிறார். அந்நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தினால் அவனுக்கு சந்தோஷம் ஏற்படுகின்றது. எவன் கடவுளின் மேல் அதிக நம்பிக்கையுடையவனாயிருக்கிறானோ, அவன் அந்நம்பிக்கையின் மூலமாக களிகூரக் கூடியதாயிருக்கும்.

சவுல் எனப்பட்ட, பவுல் கிறிஸ்தவர்களையே துன்பப்படுத்தியவர். தமஸ்குவிற்குப் போகும் பாதையிலே மனமாற்றம் அடைகின்றார் அன்றிலிருந்து அவர் கிறிஸ்துவிற்காக மனமாற்றம் அடைகின்றார். அன்றிலிருந்து அவர் கிறிஸ்துவுக்காகப் பாடுகிடுறார் அவர் கூறுகின்றார். -- "நான் எல்லாம் அடைந்தாயிற்று அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று நம்பாமல் கிறிஸ்துவினால் நான் எதற்காக அழைக்கப்பட்டேனோ, அதை நான் ஆசையோடே தொடர்வேன்". அவர் தான் கிறிஸ்துவினால் எதற்காகத் தெரிந்து கொள்ளப் பட்டேனோ அதையே செய்வேன் என்றார். அவர் கூறுகிறார்- "தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும் வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும். எவ்விடத்திலும், எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்க்வும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும், குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். அவருக்குக் கஷ்டங்கள் வந்த போதும், அவர் தன் விசுவாசத்தைக் கைவிடாமல்,

செல்வி. அ. அன்ரனீற்றா
(அளவெட்டித் திருச்சபை)

(4ம் பக்கம் பார்க்க)

# சிறார் சோலை

**இவ்வாரச் சிந்தனைக்கு:-** (கற்பனை உரையாடல் ஒன்று)

மனிதன்:- ''இறைவா 'அம்பேத்கார்' என்கிற அறிவாற்றலும், துணிவும், ஒப்படைப்பும் மிக்க மனிதரை திருச்சபை எனும் தோட்டத்திற்கு வெளியே ஏன் படைத்தீர்''?

இறைவன்:- ''திருச்சபை எனும் தோட்டத்திற்கு வேலி அமைத்தவன் யார்?''

நன்றி:- தா. வி. ஜான் ஜெயகரன்

## அன்பான தம்பி தங்கைகளே!

''கப்பல் பார்க்கப்போன சேவகன் மாதிரி'' என நாம் மற்றவர்களிடம் பேச்சுக்கள் வாங்கியிருப்போம். இதற்கு வாய்மொழிப் பாரம்பரியம் ஒன்று உள்ளது' ஒரு நாட்டின் கடற்கரையில் சரக்குக் கப்பல் ஒன்று வந்து நின்றது. உடனே அந்த நாட்டு அரசன் தனது சேவகனை அக் கப்பலைப் பார்த்துவர அனுப்பினான். சேவகன் வந்ததும் 'கப்பலில் முத்து வந்துள்ளதா?' என்றான். 'ஆம்' என்றான் சேவகன். 'பொன்?' என்றான் அரசன். திரும்பி பார்க்க ஓடினான் சேவகன். வந்து 'இல்லை' என்றான். 'வெள்ளி?' என்றான் அரசன். திரும்பப் பார்க்க ஓடினான். சலிப்படைந்த அரசன் பின்பு தனது மந்திரியாரை அனுப்பினான். மந்திரியார் பார்த்து விட்டு வந்து வந்த சரக்குகளின் பட்டியலையே சமர்ப்பித்தான். இதுவே ''கப்பல் பார்க்கப் போன சேவகனு'க்குச் சொல்லப்படும் விளக்கம்.

### சிறார் சிரிப்பு

ராமு:- ''மூளை இருக்குதா? என்று கேட்டால் கோபப்படாமல் பதில் சொல்லும் ஒரே ஆள் யார் தெரியுமா?

சோமு:- தெரியாதே ?

ராமு:- இறைச்சிக் கடைகாரர் தான்.

### புதிர் நேரம்

வேதாகமத்திலுள்ள வசனங்களுள் மிகச் சிறியது எந்த வசனம்?

தெரிந்தவர்கள் விடையை எழுதி அனுப்புங்கள்
தெரியாதவர்கள் அடுத்த இதழைப் புரட்டுங்கள்.
சரி தம்பி தங்கைகளே!! விடைபெறும் நேரம் வந்து விட்டது.
மறு இதழில் கலக்கும்வரை-

என்றென்றும் அன்புடன்
தாரகை அண்ணா

## நம்பிக்....

அதையே பற்றிக் கொண்டிருந்தார்.

''விசுவாசமே நம் ஜெயமே விலைமதியாத அவர் பொக்கிஷமே விசுவாசமாம் நம் ஜெயமாம்'' என்று ஒரு கவிஞன் விசுவாசத்தைப் பற்றி அழகாகப் பாடியுள்ளார். விசுவாசமே நம் வெற்றி. நாம் ஓர் போட்டிக்குப் போகும் போது, கடவுள் அப் போட்டியிலே எனக்கு வெற்றியைத் தருவார் என்று நாம் கடவுளின் மீது நம்பிக்கை உடையவர்களாக இருக்கும் போது அப்போட்டியிலே நாம் வெற்றி அடைவோம். நிச்சயமாக வெற்றியடைவோம். அவ் வெற்றியின் மூலமாக நாம் நாம் சந்தோஷத்தை அடையமுடியும். அதாவது நாம் நம்பிக்கையிலே களிகூரமுடியும்.

நம்முடைய திருச்சபைத் தலைவர்களிற்கு ஒரு நம்பிக்கை இருந்தபடியால், பல திருச்சபைகள் அடித்து மூடப் பட்டபோதும் அவர்கள் விசுவாசம் குறைய வில்லை. ஆனால் இன்று யாழ்ப்பாணம் மாத்திரமின்றி கொழும்பு கண்டி, நுவரெலியா, மட்டக்களப்பு போன்ற இன்னும் பல இடங்களிலும் திருச்சபைகள் நிறுவப்பட்டு சுவிசேஷ வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன: அவர்களுடைய விசுவாசமே அதற்குக் காலானது எனக் கூறலாம்.

வேதாகமத்தில் நான்கு வகையான நம்பிக்கைகள் கூறப்பட்டுள்ளன. அதாவது இரட்சிக்கும் விசுவாசம், ஆவியின் கனியே விசுவாசம், ஆவிகளைத் துரத்தும் விசுவாசம், தேவனுடைய வார்த்தைகளை விசுவாசிக்கும் விசுவாசம். சீஷர்கள் சுவிசேஷ வேலைக்கு அனுப்பப்படும் போது, அவர்கள் இயேசுவின் மேல் கொண்ட விசுவாசத்தினால், அங்கு பல நோய்கள், கொடிய வியாதிகள் போன்றவற்றை குணமாக்கினார்கள். அவர்கள் திரும்பி வந்தபோது - ''ஆவிகள் உங்களிற்கு கீழ்ப்படிந்ததற்கு சந்தோஷப் படாமல், பரலோகத்தில் உங்களுடைய நாமம் எழுதப்பட்டிருப்பதற்காக சந்தோஷப்படுங்கள்'' எனக் கூறுகின்றார்.

பேதுரு இயேசு கடலில் நடந்து வருகிறதைக் கண்டு 'நானும் வரட்டுமா?'' என்று கேட்ட போது, இயேசு 'வா' என்று கூறிய போது அவன் நடந்து செல்கின்றான். அவனுடைய விசுவாசத்தினால் அவன் சிறிது தூரம் நடந்து, அவனுடைய விசுவாசம் குறைந்தபடியால் கடலிலே தாழ்கிறான். இயேசு அவ்வேளை அவனைக் காப்பாற்றுகிறார்.

நாம் ஒன்றைக் குறித்து நம்பிக்கை வைத்திருக்கும் போது, அதனூடாக நாம் களி கூரமுடியும். நம்பிக்கை எவ்விடத்தில் இல்லாவிடத்து நாம் களிகூரமுடியாது. கிறிஸ்தவர்களாகிய நமக்கு நம்பிக்கை கட்டாயமான தொன்றாகும். நமக்கு நம்பிக்கை இருக்கும் போது, எமக்குச் செய்யத் தெரியாதவற்றையும் செய்யக் கூடியதாயிருக்கும்

## 'லைற்' அடியின் பின் 'க[G]ண்' அடி

அண்மையில் மட்டக்களப்பில் ஒரு பொலிஸ் வீரர் இறந்தது தெரிந்ததே. இது குறித்து வழக்கில் சாட்சியளித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கூறிய தகவல் வருமாறு:-

''அப்போது நான் கடமையிலே இருந்தேன். இரவு 11. 45 மணி இருக்கும். ரோச் லைற் வெளிச்சத்துடன் நகர்வுச் சத்தம் கேட்டது. அந் நகர்வு எமது காவலரணை நோக்கியே என்பதனைக் கண்டு கொண்டபின் துப்பாக்கிப் பிரயோகம் செய்தோம். ஒரு மகசீன் முடிந்தது. நாம் மற்ற மகசீனை மாற்றுவதற்குள் புலிகள் துப்பாக்கியால் சுட்டப்படி நகர்ந்து வந்தனர். நான் கத்தியபடி பொலிஸ் விடுதியை நோக்கி ஓடினேன். இரண்டு பக்கத்திலிருந்து சுமார் 25 புலிகள் இத் தாக்குதலில் ஈடுபட, மூளை சிதறி அதிகளவு இரத்தப் பெருக்கால் எமது தரப்பில் இவர் இறந்தார்'' என்பதேயாகும்.

## அக்கராயனில் செல்வீச்சு

கடந்த யூலை மாத நடுப்பகுதியில் அக்கராயான் வைத்தியசாலையில் விழுந்த ஷெல்லினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் இறந்து விட்டதாக வன்னிப் பகுதியிலிருந்து எமக்கு வந்த செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

## புலம்...

அவர்களின் புலம்பல் ஒரு நாள் களிப்பாய் மாறியது. நாம் என்றைக்கும் இப்படியாக இருப்பதில்லை. நமது எதிர்காலம் பிரகாசிப்பது நிச்சயம். ஒரு கணம் சிந்திப்போம். அடிமை வாழ்வை தகர்த்தெறிய முற்பட்ட மக்கள் துன்பத்தை அனுபவிக்காமலா இருந்தார்கள்?

எமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இறையரசை நிறுவ வந்த போது துன்பப்படாமலா அதை நிறுவிவிட்டார்? அந்த இறையரசின் பிள்ளைகளாகிய நாம் அந்த தலைவரின் சிந்தனையுள்ளவர்களாக தானே இருக்கிறோம்? கிறிஸ்தவர்களாகிய நாம் துன்பப்பட்டாலும் துன்பப்படுகிற மக்களுக்கு ஆறுதல் சொல்லுகிறவர்கள் அல்லவா? நாம் கண்ணீர் விட்டாலும் கண்ணீர் விடுகிறவர்களின் கண்ணீரை துடைக்கிறவர்கள் அல்லவா? நம்பிக்கை அற்றிருக்கும் நமது சமுகத்திற்கு எதிர்கால நம்பிக்கையை கொடுக்கும் தீர்க்கர் அல்லவா? புலம்பித் திரியும் நமது சமுகத்திற்கு களிப்பின் பாடல்களை இப்போதே தொகுக்கிறவர்கள் அல்லவா? நம் புலம்பல் ஒரு நாள் களிப்பாய் மாறும்.

து. யோசுவா
CTS இறுதியாண்டு

# கவிச் செண்டு

### தினந்தினம் இறப்பார் நாமே

செவ்வாயில் மனிதனா?
எமக்குத் தெரியாது.
இலங்கையில் சாதனையா?
எமக்குத் தெரியாது.
சிவாஜிக்கு விருதா?
தெரியவே தெரியாது -
ஏனெனில
நாம் பங்கர் வாசிகள்.
ஒன்று மட்டும்
எமக்குத் தெரியும் -
'இது இறப்பார் மலிந்த நாடு
இறப்பாரும் மலிந்த நாடு'
-வன்னியான்-

### காணாமற்போகும் கண்களுக்காக....

எனக்கு அவளைத் தெரியாது
எனக்கு அவளை இதற்கு முன்
தெரியாது
எனக்கு அவளைப் பற்றி ஒன்றும் தெரியாது
மறிக்கப்பட்டாள்;
கலங்கிய கண்களுடன்
கடைசியாய் காணும்வரை
எனக்கு அவளைத்தெரியாது
என் கண்களுக்கும் இனித்
தெரியப்போவதில்லை.
பெண்ணே,
கண் தந்த இறைவனிடம்
ஒளியும் பெற்று வருக.
இயாசன்-

### வாசகர்களே!

இது உங்களுக்கான பகுதி. எங்கே - உங்க கவிதைகளை அனுப்பிவையுங்கள் பார்ப்போம் தரமானவை நிச்சயம் பிரசுரிக்கப்படும்.

(ஆ-ர்)

### நினைவு செபக்கூட்டம்

சங்கானையைச்சேர்ந்த அமரர் திரு. கோபால் அவர்களது 19வது ஆண்டு நிறைவை ஒட்டி அன்னாரது இல்லத்தில் ஒரு குடும்ப செபக் கூட்டம் சென்ற 06/08/97 மாலை [illegible]. 30 மணியளவில் நடாத்தப்பட்டது.

### ஹீ... ஹீ...
### பண்டிதர் அகராதி

☆ Land Master — நில வாத்தியார்

☆ Rain Coat — புகையிரதக் கவசம்

☆ சவப்பெட்டி — Body box

☆ விமான ஓட்டுநர் — Aeroplane driver

☆ ஓடிக்கொலோன் — Running Cologne

(இவற்றை உருவாக்கியவர்களுக்கு நன்றி)

இப்பத்திரிகை வட்டுக்கோட்டை ஆதீனக் காரியாலயத்தில் உள்ள அமெரிக்கன் இலங்கை மிஷன் அச்சகத்தில் உதயதாரகை முகாமையாளர் சகோ பி. தேவதாஸ் அவர்களால் 1997 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.